**உயர்கல்வி(இ1)த்துறை**
**கடித (நிலை) எண். 153, நாள்.23.6.2011**

அனுப்புநர்
முனைவர்.ரா.கண்ணன், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர்,
சென்னை–6.

அம்மையீர்,

பொருள்: கல்லூரிக் கல்வி – நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவங்குவது தொடர்பான விண்ணப்பங்கள் – சார்ந்த மாவட்ட ஆட்சியருக்கு சமர்ப்பிக்க வேண்டுவது – தொடர்பாக.

பார்வ: 1. அரசாணை (நிலை) எண்.356, உயர் கல்வித் (இ1) துறை, நாள்.29.9.09.
2. அரசாணை (நிலை) எண். 4, உயர் கல்வித் (இ1) துறை, நாள்.7.1.2011.

******

பார்வையில் காணும் அரசாணைகளின்மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. இவற்றினைத் தொடர்ந்து, இனி வரும் காலங்களில், அரசின் நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவங்க அரசின் அனுமதி வேண்டி கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு விண்ணப்பிக்கும் போதே இவ்விண்ணப்பங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள, துவங்கப்படவுள்ள கல்லூரிகளுக்கான நிலத்தின் விபரம், அந்நிலம் விவசாய நிலமாக இருக்கும்பட்சத்தில் அதற்கு உரிய அனுமதி பெறப்பட்டு அந்நிலத்தில் கல்லூரிக்கான கட்டிடங்கள் கட்ட நகர் ஊரமைப்புத் துறையின் (Town and Country Planning) ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா? மற்றும் அத்துறையின் ஒழுங்குமுறைகளின்படி (Regulations) இவற்றிற்கான மண்டலம் என்ன? மேலும் கல்லூரிகளின் ஆய்வக கழிவுகளை அப்புறப்படுத்துவதற்கான உரிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளதா மற்றும் கல்லூரிகள் அவ்விடத்தில் அமைவதனால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல், சுற்றுப்புறச்சூழல், சுற்றுப்புற சுகாதாரம் மற்றும் கல்லூரிக்கான கட்டிட அமைப்பு (மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள் உட்பட) ஆகியவற்றின் மீது சார்ந்த மாவட்ட ஆட்சியரின் அறிக்கையினையும் பெற்று பரிசீலிக்க ஏதுவாக, சார்ந்த மாவட்ட ஆட்சியருக்கும் விண்ணப்பிக்குமாறு கல்வி முகமைகளுக்கு அறிவுறுத்துமாறு தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்.
உயர் கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
இ.கோ / உதிரி.